செ.வெ.எண். 14 நாள் - 10.11.2020

**நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்ற மற்றும் நடைபெற்று முடிந்த வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

---

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு இடங்களில் வளர்ச்சித்திட்டப் பணிகள் நடைபெற்று மற்றும் முடிவுற்ற பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.11.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவாதாக உதகை ஊராட்சி ஒன்றியம், மேல்கவட்டியில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடத்தின் பின்புறம் கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவர் பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், முத்தொரை முதல் கப்பத்தொரை வரை ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மண் கால்வாய் அமைத்தல் பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கே.கே.நகர் பகுதியில் ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பண்ணை குட்டை அமைக்கும் பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கே.கே.நகர் பகுதியில் ரூ.15 ஆயிரம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் காய்கறி தோட்டப் பணியினையும், கே.கே.நகர் பகுதியில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீட்டினை என மொத்தம் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று முடிந்த மற்றும் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஸ்ரீதரன், திரு.ஜெய்சங்கர் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்